30.01.2024

அ.வ.எண். 114/2018

சதீஸ் குமார் (P.W.1)

பிரதிவாதிகள் 1 மற்றும் 2 தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பொதுப்பணித்துறையில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். நான் தற்போது ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி பெயரில் உள்ள ஆவணமானது ரியல் எஸ்டேட் தொழிலுக்காக ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சுற்றுச்சுவரை இடிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது மனைவி தற்போது எங்கு உள்ளார் என்றால் எனது வீட்டில் அவர் உடல்நிலை சரியல்லாமல் உள்ளார். அவருக்கு எவ்வளவு நாட்களாக உடல்நிலை சரியில்லை என்றால் இரண்டு வருடங்களாக உடல்நிலை சரியில்லை. அவருக்கு ரத்தகொதிப்பு, சர்க்கரை வியாதி மற்றும் அவரால் வீட்டுப்படிக்கட்டில் ஏறமுடியாத அளவில் உடல்நிலை சரியில்லாமல் உள்ளார். நீதிமன்றத்தில் மின்தூக்கி உள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது பொய் என்றாலும் தற்போதும் எனது மனைவி நல்ல உடல் ஆரோக்கியத்துடன் தான் உள்ளார் என்றால் சரியல்ல. அவர் நீதிமன்றத்திற்கு வந்தால் உண்மைநிலை தெரிந்து விடும் என்பதால் தான் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் சரியல்ல. அவர் தற்போது என்னுடன் இல்லை என்றாலும் அவர் பெற்றோர் வீட்டில் தான் உள்ளார் என்றால் சரியல்ல.

2. கடந்த இரண்டு வருடமாக எனது மனைவி வழக்கறிஞர் அலுவலகத்திற்கு வந்து கையெழுத்து போடவில்லையா என்றால் ஆமாம். நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனது மனைவி ஏதாவது எழுத்து மூலமாக அதிகாரம் எதுவும் கொடுக்கவில்லையா என்றால் ஆமாம். வழக்கு சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 40 சென்ட் ஆகும். அதை நான் அளந்து பார்த்துள்ளேன். வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் ஜனார்த்தனன் போற்றி மற்றும் இலட்சுமி நாராயண சர்மா ஆகியோரின் சொத்து உள்ளது. மேற்கு பக்கம் சாலை உள்ளது. கிழக்கு பக்கம் ஜான்ரோஸின் சொத்து உள்ளது. தெற்கு பக்கம் சாணல் உள்ளது.

3. கிரைய ஆவண எண்.6363/1969 மற்றும் 3743/1964 முன் ஆவணங்களின் படி எனது மனைவி பெயரில் வாங்கிய சொத்தானது முன்ஜென்மிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களையும் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி ஆவணங்களில் உள்ள சொத்தின் எல்கைகளை பார்த்தேனா என்றால் படித்துப்பார்க்கவில்லை. பட்டிகை சொத்தும் கூடுதல் சொத்தும் தேரக வேலி மடத்திற்கு பாத்தியப்பட்டதா என்றால் இல்லை. கிரைய ஆவண எண்.6363/1969 மற்றும் 3743/1964 -இல் உள்ள சொத்தானது தேரக வேலி மடம் மடத்திற்கு பாத்தியப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தேரக வேலி மடம் 6363/1969 ஆவணத்தில் இருப்பு புரையிடத்தில் வடக்கணையா 5 ஏக்கர் 35 சென்டில் ஏழாவிற்கு மேற்கும் பொன்னன் நாடார், சாமிக்கண்ணு நாடார் விலைப்படி அனுபவித்துவருகிற ஸ்தலத்திற்கு வடக்கும் திற்பரப்பு எல்.பி. சாணலுக்கு எடுத்துள்ள இடத்திற்கு இடைவெளிக்கும் கிழக்கும் மற்றும் இடைவெளிக்கும் ஏழாவிற்கும் தெற்குமாக கிடப்புள்ள கிடக்கின்ற 1 ஏக்கர் 84 சென்டுள்ள கண்டத்தில் வடக்கணையா 50 சென்ட் மனை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி 50 சென்டில் தான் எனது மனைவி 40 சென்டை வாங்கினாரா என்றால் இல்லை 65 சென்டில் 40 சென்டை வாங்கினார்.

4. சுப்பிரமணியன் போற்றி மற்றும் கிருஷ்ணன் போற்றி ஆகியோர் கோவிலில் பூசாரிகளா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் மேற்படி மடத்திற்குரிய கோவில்கள் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் தேரக வேலி மடத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளதா என்றால் இல்லை. மேற்படி கிருஷ்ணன் போற்றி தேரக வேலி மடத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை பராமரிப்பதற்கு நியமிக்கப்பட்ட டிரெஸ்டியா என்றால் இல்லை. மேற்படி 50 சென்ட் இடத்தில் தேரக வேலி மடம் இருந்ததாக சொல்லப்படுவது சரியா என்றால் சரியில்லை. கிரைய ஆவண எண் 3743/1964 -இல் ஒரு ஏக்கர் 35 சென்டில் மேக்கணையா தென்வடலாக கிடப்புள்ளதும் மேற்படி 50 சென்டிலும் சேத்திரங்கள் இருப்பு ஸ்தலத்திலும் மடம் இருந்த ஸ்தலத்திலும் மேற்கு சாமிக்கண்ணு நாடார் ஸ்தலத்திற்கு வடக்கும் சாணலுக்கு கிழக்கும் இடைவெளிக்கும் தெற்கும் கொண்டதுமான 40 சென்ட் மரங்களுடன் கூடியது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல.

5. மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்கைக்கு உட்பட்ட சொத்து ஸ்தலத்தில் உள்ளதா என்றால் இல்லை. பட்டிகை சொத்து கிழக்கு மேற்காக அமைந்துள்ளது தவிர வடக்கு தெற்காக இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரைய ஆவண எண்.6363/1969 மற்றும் 3743/1964 -ஐ பற்றி எனது முதல் விசாரணையில் கூறியபோதும் தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் மேற்படி இரண்டு ஆவணங்களையும் எனக்கு தரவில்லை. அப்படியென்றால் மேற்படி இரண்டு ஆவணங்களையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு முன் ஆவணங்களையும் நான் பார்க்காத நிலையில் அதன்படி வழக்கு சொத்து எனது மனைவியின் முன் ஜென்மிகளுக்கு பாத்தியப்பட்டது என்று எனது முதல் விசாரணையில் நான் கூறியுள்ளேன் என்றால் மேற்படி ஆவணங்களை நான் பார்த்துள்ளேன். மேற்படி இரண்டு ஆவணங்களிலும் உள்ள சொத்து தேரக வேலி மடத்திற்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது பொய் என்றாலும் மேற்படி இரண்டு ஆவணங்களிலும் உள்ள சொத்து தேரக வேலி மடத்திற்கு பாத்தியப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது என்றாலும் அதை தாக்கல் செய்தால் மேற்படி உண்மை நிலை தெரிந்து விடும் என்பதால் அதை வேண்டும் என்றே இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.1 -இல் தேரகவேலி மடம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. அப்படியென்ற மடம் என்ற ஒன்று உண்டா என்றால் இல்லை. வா.சா.ஆ.1-ஐ எனது மனைவி பெயருக்கு எழுதிக்கொடுத்த கிருஷ்ணன் போற்றி என்பவர் தேரக வேலி மடத்தில் வசித்து வந்தவர் என்று சொன்னால் இல்லை. வா.சா.ஆ.1-இல் இரண்டு சர்வே எண் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல ஒரே சர்வே எண் பற்றி தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1-இன் மூலம் கொடுக்கப்பட்ட சொத்து போக மீதமுள்ள சொத்தில் ஒரு ஆர்.சி.சி வீடு இருந்தது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி நாங்கள் வாங்கியதாக கூறப்படும் 40 சென்டில் உள்ள வீட்டை யார் கட்டியது என்றால் கிருஷ்ணன் போற்றி ஆகும். வா.சா.ஆ.1-இல் உள்ள எல்கைகள் எல்லாம் சரிதானா என்றால் சரிதான். வா.சா.ஆ.1-இல் உள்ள சொத்தின் எல்கை படி ஸ்தலத்தில் சொத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபணை எதுவும் இல்லையா என்றால் சரிதான்.

7. ஆணையரின் வரைபடத்தின் படி பட்டிகை சொத்திற்கு சாணலானது ஒரு எல்கையாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆனால் சர்வேயர் நிலத்தை அளந்தபோது எல்கையை தவறாக காட்டியுள்ளார். வரைபடத்தில் வழக்கு சொத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கு பக்கத்தை தொட்டு இடைவெளி எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வழக்கு சொத்திற்கு வடகிழக்கு பக்கத்தில் கட்டமிட்டு காட்டப்பட்டுள்ள இடமானது தேரக வேலி மடமா என்றால் இல்லை அது வீடு ஆகும். வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் தற்போதும் மேற்படி மடத்திற்குரிய ஸ்ரீகிருஷ்ணன் மற்றும் தேவி கோவில் மற்றும் உபதேவதைகளுக்கான கோவில்கள் தனித்தனியாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தேரகவேலி மடத்தின் பூசாரிகள் மேற்படி மடத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துகளை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தங்களுக்குள்ளாகவே வா.சா.ஆ.2 ஆனதின் முன்ஆவணங்களாக குறிப்பிடப்பட்டுள்ள கிரைய ஆவண எண்.6363/1969 மற்றும் 3743/1964-ஆகியவற்றில் இஷ்டதானமாக ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

8. வழக்கு பட்டிகை சொத்திற்கு வடக்கு பக்கம் மேற்படி கோவில்களுக்கு பக்தர்கள் செல்லக்கூடிய பாதையாக பயன்படுத்தப்பட்ட இடம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து வடக்கு மற்றும் தெற்கு பக்கமாக இல்லாமல் அதன் வடக்கு பக்கம் உள்ள சொத்தோடு சேர்ந்து 5 ஏக்கருக்கு மேலாக தற்போது உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து மேற்படி 5 ஏக்கருக்கு மேலாக உள்ள சொத்துடன் சேர்ந்தார்போல் உள்ளதாலும் மேலும் மடத்தின் சொத்தை யாரும் விலைக்கு வாங்கமுடியாது என்பதாலும் மேலும் கோவில் பயன்பாட்டிற்கு தேவையான சொத்து என்பதாலும் நான் வழக்கு சொத்தை பொறுத்து எல்கை நிர்ணயம் செய்யக்கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் சுற்றுச்சுவர் கட்ட முயன்றபோது 1 முதல் 4 பிரதிவாதிகள் அதை தடுத்தார்கள். அவ்வாறு தடுத்ததால் தான் நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் சரிதான். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் மடத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து மற்றும் கோவில்களை பார்வையிட்டு பராமரிப்பதற்காகவும் மற்றும் பூஜை செய்வதற்காகவும் நியமனம் செய்யப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

9. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளித்துள்ளதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்பதாலும் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மடம் மற்றும் அதற்கு பாத்தியப்பட்ட கோவில்கள் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதால் அவர்களும் இவ்வழக்கிற்கு அவசிய கட்சி என்பதாலும் மேலும் அவர்களை இவ்வழக்கில் கட்சிசேர்க்காததால் இவ்வழக்கு அவசிய தரப்பினரை கட்சி சேர்க்கவில்லை என்ற காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆகையால் பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.